# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.50 of 2025
Prosecution Witness No.P.W.1 (L.W.1)

| | |
|---|---|
| Name | ராஜா |
| Father/Husband Name | கணேசன் |
| Calling/Occupation | கூலி |
| Age | 40 |
| Address | வேலூர். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.06.2026.

(A1 and A2 Present)

**முதல் விசாரணை**

நான் வேலூர் வசந்தபுரத்தில் வசித்து வருகிறேன். நான் வேலூர் மார்க்கட்டில் லாங்க் பஜார் பிளாட்பாரத்தில் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தேதி மாதம் நினைவில்லை விடியற்காலை சுமார் 05.00 மணி இருக்கும் அப்போது நான் வியாபாரம் செய்துக்கொண்டிருந்தேன் அப்போது போலிசார் என்னை அழைத்து என்னிடம் ஒரு வெற்றுத்தாளில் கையொப்பம் வாங்கிக்கொண்டு சென்றுவிட்டார்கள்.

வழக்கு பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகாரில் உள்ள என்னுடைய கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.1** ஆகும். அதில் என்ன எழுதியுள்ளது என்று தெரியாது.

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

போலீசார் விசாரணையில் 24.06.2024 அன்று காலை 05.00 மணிக்கு சிறுநீர் கழிப்பதற்காக வேலூர் அண்ணா பஜார் திறந்தவெளி கடை அருகில் சென்றபோது ஆஜர் எதிரிகள் இருவரும் என்னை வழி மடக்கி லாங்க் பஜாரில் உள்ள அனைத்து கடைக்காரர்களும் எனக்கு மாமூல் தருகிறார்கள் அது போல நீங்களும் தர வேண்டும் என்று என்னை மிரட்டினார்கள் என்றும் என்னிடம் பணம் இல்லை என்று நான் சொன்னேன் என்றும் ஆஜர் 1ம் எதிரி என்னை பார்த்து கோத்தா தெவிடியா பையா நான் பணம் கேட்டால் இல்லை என்கிறாயா நான் யார் என்று தெரியுமா என்றும் என்னை பார்த்தால் இந்த ஏரியாவே நடுங்கும் என்றும் என் மேல் நிரைய வழக்குகள் உள்ளது என்றும் நாங்கள் கொலை செய்யக்கூட தயங்க மாட்டோம் என்று என்னை மிரட்டினார்கள் என்றும் மேலும் ஆஜர் முதல் எதிரி கத்தியை எடுத்து என் வயிற்றில் வைத்தார் என்றும் பின்னர் ஆஜர் 2ம் எதிரி டேய்

அவன் பாக்கட்டில் உள்ள பணத்தை எடுடா என்று சொன்னார் என்றும் அப்போது என் பாக்கட்டிலிருந்து ரூ.1500/– ஐ ஆஜர் 2 ம் எதிரி பிடுங்கிக்கொண்டார் என்றும், நான் கூச்சலிடவே ஆகாஷ் மற்றும் தினேஷ்குமார் ஆகியோர் அங்கு ஓடி வந்தார்கள் என்றும் அவர்களை பார்த்து கிட்ட வந்தால் கத்தியால்குத்தி கொலை செய்துவிடுவேன் என்ற சொல்லிவிட்டு எதிரிகள் ஓடிவிட்டார்கள் என்றும் பின்னர் நான் காவல் நிலையம் சென்று எழுத்துமூலமான புகார் கொடுத்தேன் என்றும் உதவி ஆய்வாளர் அதை பதிவு செய்தார் என்றும் பின்னர் அன்றே மாலை 06.00 மணிக்கு ஆஜர் எதிரியை கைது செய்து காவல் நிலையத்தில் வைத்திருப்பதாக தகவல் பெற்று நிலையம் சென்று நான் எதிரிகளை அடையாளம் காண்பித்தேன் என்றும் அவர்கள் வைத்திருந்த கத்தியையும் நான் அடையாளம் காண்பித்தேன் என்றும் வழக்கு சம்பந்தமாக என்னை உதவி ஆய்வாளர் என்னை இரண்டு முறை விசாரித்தார் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளும், சாட்சியும் ஒரே பகுதியில் பக்கத்து பக்கத்தில் உள்ளார்கள் என்றால் சரிதான். அதனால் குடும்பத்தில் உள்ள முதியவர்களின் முன்னிலையில் சமாதானம் பேசி எதிரிகளுடன் பேசிக்கொண்டு உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வடக்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கறிவேப்பிலை வியாபாரம் செய்கிறேன் என்றால் சரிதான். அதனால்

போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் கையொப்பம் போட்டு கொடுத்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கை பற்றி எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.06.04 17:28:40 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.50 of 2025
Prosecution Witness No.P.W.2 (L.W.3)

| | |
|---|---|
| Name | **திேனஷ்குமார்** |
| Father/Husband Name | **குமார்** |
| Calling/Occupation | **கூலி** |
| Age | 34 |
| Address | **ெகாசப்ேபட்ைட, ேவலூர்.** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.06.2026.

(A1 and A2 Present)

**முதல் விசாரைண**

நான் ேவலூர் ெகாசப்ேபட்ைடயில் வசித்து வருகிேறன். அ.சா.1ஐ ெதரியும். அவர் என்னுடன் ேவலூர் மார்க்கட்டில் வியாபாரம் ெசய்கிறார். ஆஜர் எதிரிகைள ெதரியாது. நான் ேவலூர் மார்க்கட்டில் காய்கறி வியாபாரம் ெசய்து வருகிேறன். சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு ேததி மாதம் நிைனவில்ைல ேபாலீசார் என்னிடம் விலாசம் ேகட்டு ைகெயாப்பம் வாங்கிச்ெசன்றார்கள். நான் ேவலூர் அண்ணா பஜார் திறந்தெவளி கைடகள் அருகில் காய்கறி வியாபாரம் ெசய்கிேறன்.

அங்கு என்ன பிரச்சினை நடந்தது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

போலீசார் விசாரணையில் 24.06.2024 அன்று காலை 05.00 மணிக்கு சிறுநீர் கழிப்பதற்காக வேலூர் அண்ணா பஜார் திறந்தவெளி கடை அருகில் சென்றபோது ஆஜர் எதிரிகள் இருவரும் அ.சா.1ஐ வழி மடக்கி லாங்க் பஜாரில் உள்ள அனைத்து கடைக்காரர்களும் எனக்கு மாமூல் தருகிறார்கள் அது போல நீங்களும் தர வேண்டும் என்று அவரை மிரட்டினார்கள் என்றும் அவர் தன்னிடம் பணம் இல்லை என்று சொன்னார் என்றும் ஆஜர் 1ம் எதிரி அவரை பார்த்து கோத்தா தெவிடியா பையா நான் பணம் கேட்டால் இல்லை என்கிறாயா நான் யார் என்று தெரியுமா என்றும் என்னை பார்த்தால் இந்த ஏரியாவே நடுங்கும் என்றும் என் மேல் நிரைய வழக்குகள் உள்ளது என்றும் நாங்கள் கொலை செய்யக்கூட தயங்க மாட்டோம் என்று அவரை மிரட்டினார்கள் என்றும் மேலும் ஆஜர் முதல் எதிரி கத்தியை எடுத்து அ.சா.1ன் வயிற்றில் வைத்தார் என்றும் பின்னர் ஆஜர் 2ம் எதிரி டேய் அவன் பாக்கட்டில் உள்ள பணத்தை எடுடா என்று சொன்னார் என்றும்

அப்போது அவர் பாக்கட்டிலிருந்து ரூ.1500/– ஐ ஆஜர் 2ம் எதிரி பிடுங்கிக்கொண்டார் என்றும், அவர் கூச்சலிடவே ஆகாஷ் மற்றும் நான் ஆகியோர் அங்கு ஓடிச்சென்றோம் என்றும் எங்களை பார்த்து கிட்ட வந்தால் கத்தியால்குத்தி கொலை செய்துவிடுவேன் என்று சொல்லிவிட்டு எதிரிகள் ஓடிவிட்டார்கள் என்றும் பின்னர் அசா.1 காவல் நிலையம் சென்று எழுத்துமூலமான புகார் கொடுத்தார் என்றும் உதவி ஆய்வாளர் அதை பதிவு செய்தார் என்றும் ஆஜர் எதிரிகளும், நாங்களும் ஒரே பகுதியில் பக்கத்து பக்கத்தில் உள்ளார்கள் என்றால் சரிதான். அதனால் குடும்பத்தில் உள்ள முதியவர்களின் முன்னிலையில் சமாதானம் பேசி எதிரிகளுடன் பேசிக்கொண்டு உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2026.06.04 17:29:23 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.50 of 2025
Prosecution Witness No.P.W.3 (L.W.4)

| | |
|---|---|
| Name | முனியப்பன் |
| Father/Husband Name | முனுசாமி |
| Calling/Occupation | கூலி |
| Age | 65 |
| Address | வேலூர். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.06.2026.

(A1 and A2 Present)

**முதல் விசாரணை**

நான் வேலூரில் வசந்தபுரத்தில் வசித்து வருகிறேன். நான் வேலூர் பழைய மீன் மார்கட்டில் செருப்பு கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் 2 ஐ தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. சுமார் இரண்டு வருடங்களுக்கு ஒரு நாள் காலை 07.00 மணி அளவில் போலீசார் பிரச்சினை நடந்த இடத்தை பார்வையிட்டு ஆவணம் தயார் செய்து அதில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என் முன்பு ஏதோ படம் போட்டார்கள். வழக்கு பற்றி தெரியாது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

நான் கையொப்பம் செய்த ஆவணம் என்னிடம் காண்பிக்கப்படுவது. அதில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ.2 ஆகும்.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN
Date: 2026.06.04 17:29:31 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.50 of 2025
Prosecution Witness No.P.W.4 (L.W.7)

| | |
|---|---|
| Name | பட்டாபி |
| Father/Husband Name | நடுலையன் |
| Calling/Occupation | கூலி |
| Age | 65 |
| Address | வேலூர். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.06.2026.

(A1 and A2 Present)

**முதல் விசாரணை**

நான் வேலூர் ஓல்டு டவுன் எம்ஜிஆர் நகரில் வசித்து வருகிறேன். நான் 30 ஆண்டுகளாக வேலூர் மார்க்கட்டில் மூட்டை தூக்கும் தொழில் செய்து வருகிறேன். அ.சா. 1 முதல் 3 வரை தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் மூட்டை தூக்கிக்கொண்டு நான் வந்துக்கொண்டிருந்தபோது போலீசார் என்னை அழைத்து என்னை கையொப்பம் போடச்சொன்னார்கள். எதற்கு என்று கேட்டேன். சும்மா கையொப்பம் போடு என்று சொன்னதால் நான் போட்டு கொடுத்தேன்.

ஆஜர் எதிரிகளை தெரியாது. இந்த வழக்கு பற்றியும் எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பங்கள் என்னுடையதுதான். அவைகள் முறையே **அ.த.சா.ஆ.3 மற்றும் அ.த.சா.ஆ.4** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

போலீசார் விசாரணையில் நான் கடந்த 24.06.2024 அன்று பகல் 11.00 மணி அளவில் நானும், முருகன் என்பவரும் வேலூர் கோட்டை பெரியார் பூங்கா அருகில் இருந்தபோது போலீசார் ஆஜர் இரண்டு எதிரிகளையும் பிடித்து விசாரித்தனர் என்றும் எங்களை சாட்சிகளாக இருக்க சொன்னதின் பெயரில் நான் சம்மதித்தோம் என்றும் அப்போது இந்த வழக்கில் நாங்க்ள சம்பந்தப்பட்டுள்ளதாக சொல்லி 1ம் எதிரி தாமாக முன் வந்து காலை 11.30 மணிக்கு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதை பதிவு செய்து அதில் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் அதில் ஆஜர் 1ம் எதிரியும் கையொப்பம் செய்தார் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கில் பயன்படுத்திய கத்தியை எங்கள் முன்பு எடுத்து ஆஜர் செய்ததை போலீசார் கைப்பற்றுதல் மகசர் மூலம்

கைப்பற்றிக்கொண்டனர் என்றும் அதில் நாங்களும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் பின்னர் இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் எங்கள் இருவரையும் விசாரித்தார் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.06.04 17:29:41 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.50 of 2025
Prosecution Witness No.P.W.5 (L.W.10)

| | |
|---|---|
| Name | **தருமன்** |
| Father/Husband Name | **கோபால்** |
| Calling/Occupation | **காவல் ஆய்வாளர்** |
| Age | 34 |
| Address | **பள்ளிக்கொண்டா காவல் நிலையம்.** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.06.2026.

(A1 and A2 Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 24.06.2024 அன்று நான் வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் (சட்டம் ஒழுங்கு) பணிபுரிந்தபோது காலை 06.00 மணிக்கு அ.சா. 1 எழுத்து மூலமான புகார் என் முன்பு கொடுத்தார் என்றும் **அந்த புகார் அ.த.சா.ஆ.5** ஆகும். அந்த புகாரின் அடிப்படையில் காலை 06.00 மணிக்கு ஆஜர் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை காவல் நிலைய குற்ற எண் 327/2024, சட்ட பிரிவுகள் 392, 397 இ.த.ச ன் கீழ் பதிவு செய்தேன்.

**அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.6** ஆகும். பின்னர் முதல் தகவல் அறிக்கை மற்றும் அதன் நகல்களை காவலர் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் இந்த வழக்கில்சம்பவ இடமான வேலூர் அண்ணா பஜார் திறந்த வெளி கடை அருகில் சென்று சாட்சிகள் முனியப்பன் மற்றும் மொய்தீன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தில் பார்வை மகசர் தயார் செய்தேன் என்றும் பின்னர் அதன் தொடர்ச்சியாக ஒரு மாதிரி வரைபடம் நான் வரைந்தேன். **அந்த மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.7** ஆகும்.

பின்னர் இந்த வழக்கின் சாட்சிகள் அ.சா.1, ஆகாஷ், தினேஷ்குமார் ஆகியோர் முனியப்பன் மற்றும் மொய்தீன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன். மேலும் சம்பவத்தன்றே மதியம் 11.00 மணிக்கு சாட்சிகள் முருகன் மற்றும் பட்டாபி ஆகியோர்கள் முன்னிலையில் ஆஜர் எதிரிகளை கோட்டை பெரியார் பூங்கா அருகில் சாட்சிகள் முன்னிலையில் கைது செய்து ஆஜர் 1ம் எதிரியிடம் வாக்குமூலம் 11.15 மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் விசாரிக்க அவர் தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததை நான் பதிவு செய்து சாட்சிகள் மற்றும் எதிரியின்கையொப்பம் பெற்றேன் என்றும், அதன் தொடர்ச்சியாக மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் அன்றே மதியம் 12.00 மணி அளவில் அதே இடத்தில் ஆஜர் 1ம் எதிரி பயன்படுத்திய கத்தியை

எடுத்து ஆஜர் செய்த அதை நான் மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். **அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.8. அந்த கத்தி சா.பொ.1** ஆகும். பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி வழக்கின் சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன்.

பின்னர் சாட்சிகள் முருகன் மற்றும் பட்டாபி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும், இந்த வழக்கின் கோப்பினை மேல் புலன் விசாரணைக்காக என்னுடன் பணிபுரிந்த அவரின் கையொப்பம் பரிட்சையமான சீனிவாசன் என்பவரின் பார்வைக்கு வழக்கு கோப்பினை வைத்தேன். அவர் இந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கோப்புகளை பார்வையிட்டு அதன் அடிப்படையில் சாட்சிகளை விசாரிக்க கணினியில் தட்டச்சு செய்த அன்னல் ரெபேக்கால் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். மேலும் என்னையும் விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்தார்.

பின்னர் வழக்கின் விசாரணை முடித்து ஆஜர் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 392 மற்றும் 506(2) இ.த.ச பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். என்னுடைய விசாரணை காலத்திலும் ஆய்வாளரின் விசாரணை காலத்திலும் சாட்சிகள் 1 முதல் 4 வரை உள்ளவர்கள்

வழக்கில் உள்ள கோப்பில் உள்ளவாறு எங்கள் முன்பு வாக்குமூலம் அளித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் சொன்ன தேதி சொன்ன இடத்தில் எந்த குற்ற செயலும் செய்யவில்லை என்றாலும், எதிரிகளை சொன்ன தேதி சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும், எதிரிகள் எந்த ஒரு வழக்கு சொத்தையும் கைப்பற்றவில்லை என்றும், வழக்கு சொத்துக்கள் மற்றும் ஒப்புதல் வாக்குமூலங்கள் இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றும் அப்படி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் எதிரியால் கொடுக்கப்படவில்லை என்றும், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் சரியான புலன் விசாரணை மேற்கொள்ளாமல் ஆவணங்களை காவல் நிலையத்திலேயே தயார் செய்துக்கொண்டு புள்ளி விவர கணக்கிற்காக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.06.04 17:29:51 +0530